**018/DM/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I-GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours | Maximum Marks : 100

**I.** எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி : (6 × 4 = 24)

1. பஞ்ச கவ்யம் என்பது எந்தப் பொருள்களைக் கலந்து செய்வது?

2. தமிழினம் புலம் பெயரக் காரணங்கள் யாவை?

3. விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழில் தோன்றிய நாடகங்கள் சில கூறுக.

4. தொகை நிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

5. அஞ்சலையம்மாள் நடத்திய போராட்டங்கள் யாவை?

6. ஞாயிறு வட்டம் என்பதனைப் பழந்தமிழர் எவ்வாறு அறிந்திருந்தனர்?

7. ஓவிய வரைபடங்களாகத் திகழ்பவை எவை?

8. ஓலைச் சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் நான்கு எழுதுக.

**II.** எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி : (6 × 6 = 36)

9. வள்ளியம்மை குறித்த காந்தியடிகளின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

10. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?

11. சித்தன்னவாசல் ஓவியங்களைப் பற்றி எழுதுக.

[Turn over

12. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

13. தமிழரின் கடற்பயணம் குறித்து எழுதுக.

14. பின்வரும் பழமொழிகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுக :
(அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
(ஆ) விளையும் பயிர் முளையிலே தெரியும்.
(இ) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
(ஈ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
(உ) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
(ஊ) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

15. பட்டுநூல் எவ்வாறு உருவாகிறது?

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி :** (4 × 10 = 40)

16. உரைப்பகுதியைப் படித்து சுருக்கி எழுதுதல் :
சிக்கனமாய் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியுமா? செலவுகளைக் குறைத்தல் வேண்டும. அப்படியானால் நல்ல உணவு சிறந்த ஆடை மற்றும் தேவையான பொருள்கள் முதலியவற்றுக்குப் போதிய அளவு செலவு செய்யாமல் வாழ்வதா? அற்றன்று. நோய் வந்து விட்டால் அதைத் தீர்ப்பதற்கு மருத்துவச் செலவு செய்யாமாலிருப்பதா? அதுவும் அன்று. தனக்கும் தன் குடும்பத்திற்கும் தேவையான இன்றியமையாத செலவுகளைச் செய்யத் தான் வேண்டும். தேவைக்குச் செலவிட்டது போக எஞ்சிய வருவாயில் எதிர்கால வாழ்க்கைக்குச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும். எறும்பு மழைக்காலத்தில் தனக்கு வேண்டிய உணவைக் கோடைக்காலத்திலேயே தேடி வைத்துக் கொள்கிறது அன்றோ? அது போல நாமும் உழைக்கவும் ஊதியம் மிகுதியாகத் தேடவும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும் போதே சேர்த்து வைக்க முயலுதல் வேண்டும். எதிர்காலப் பாதுகாப்புமிக்க வாழ்க்கையின் பொருட்டாவது சிக்கனமாக வாழும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல் சிறுகச் சிறுக சேமித்தாலே பெரும்பொருள் சேமித்து விடலாம். சிக்கனமாக வாழ்வோம் சிறப்புடன் வாழ்வோம்.

17. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

18. நான் விரும்பும் நூல் (திருக்குறள்).

19. கட்டுரை எழுதுதல் : தமிழ் மொழியின் சிறப்புகள்.

20. பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தின் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.